வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 109 of 2017

வழக்கு சாட்சி - PW 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.தங்கவேல் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | பழனிசாமி | தொழில் | : | கோழிப்பண்ணை வைத்துள்ளேன். |
| கிராமம் | : | கருமாபுரம் | சமயம் | : | |
| தாலுக்கா | : | பொள்ளாச்சி | வயது | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 27.01.2025.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 27.01.2025**

1) நான் தற்போது மேலே கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு கோழிப்பண்ணை வைத்து தொழில் செய்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நாதேகவுண்டன்பாளையம் கிருஷ்ணசாமி கவுண்டருக்கு சொந்தமான தோட்டத்தில் மேனேஜராக வேலை செய்து வந்தேன். விபத்தில் இறந்துபோன நாகராஜ், வெள்ளியங்கிரி இருவரும் தேங்காய் களத்தில் வேலை செய்து வந்தார்கள். நாகராஜ் தேங்காய் உடைக்கும் வேலையும், வெள்ளியங்கிரி வேன் டிரைவராகவும் வேலை செய்து வந்தார்கள். கடந்த 06.02.2017 ஆம் தேதி எனது இருசக்கர வாகனத்தில் தேங்காய் லோடு வருவது சம்மந்தமாக நாதேகவுண்டன் பாளையத்திலிருந்து பல்லடம் நோக்கி வந்து கொண்டிருந்தேன்.

2) காலையில் நாகராஜ், வெள்ளியங்கிரியை அழைத்துக்கொண்டு இருசக்கர வாகனத்தில் ஒரு வேலையாக சென்று வருவதாக சொல்லிவிட்டு வந்தவர் தாராபுரம்-பல்லடம் ரோட்டில் கள்ளக்கிணறு திவ்யா பெட்ரோல் பங்க் அருகில் நான் வந்து கொண்டிருந்தபோது நாகராஜ் இருசக்கர வாகனத்தை ஓட்ட, அவருக்கு பின்னால் வெள்ளியங்கிரி உட்கார்ந்து கொண்டு வரும்போது தாராபுரத்திலிருந்து பல்லடம் நோக்கி வந்த TN 47 U 1804 பதிவு எண் கொண்ட TATA ACE வாகனம் வேகமாக வந்து நாகராஜ் ஓட்டி வந்த TN 42 F 0466 பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில்

இருவரும் வண்டியிலிருந்து கீழே விழுந்துவிட்டார்கள். அருகில் இருந்தவர்கள் எல்லாம் வந்து விட்டார்கள். நாகராஜ்க்கு காதிலிருந்து இரத்தம் வந்தது. வெள்ளியங்கிரிக்கு முகம், நெஞ்சு, நெற்றி ஆகிய இடங்களில் பலத்த காயம் ஏற்பட்டு இருந்தது. இருவரையும் ஆம்புலன்ஸ் மூலம் பல்லடம்அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துவிட்டு நானும் இருசக்கர வாகனத்தில் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு வந்தேன். வெள்ளியங்கிரிக்கு முதல் சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவனைக்கு அனுப்பி வைத்தார்கள். நாகராஜை பரிசோதித்துவிட்டு இறந்துவிட்டதாக சொன்னார்கள்.

3) நான் உடடினயாக நாகராஜின் மனைவியிடம் செல்போன் இல்லாததால் பக்கத்தில் உள்ள நபருக்கு தகவல் சொல்லி அவரை மருத்துவமனைக்கு வரச்சென்னேன். பிறகு நாகராஜின் மனைவியை விபத்து குறித்து புகார் கொடுக்க பல்லடம் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தேன். புகாரை நான் எழுதி கொடுக்க நாகராஜின் மனைவி ராதா கையொப்பம் செய்தார். TATA ACE வாகனத்தை ஓட்டி வந்த நபரை சம்பவத்தன்று பார்த்தேன். (எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது). அவரை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த வெள்ளியங்கிரி மறுநாள் இறந்துவிட்டார். போலீசார் நாகராஜ் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தார்கள். நான் உடனிருந்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :</u>

4) சம்பவ சமயத்தில் நான் எங்கு குடியிருந்தேன் என்றால் 7 ½ வருடமாக தேங்காய் களத்தில் குடியிருந்தேன். நான் பட்டப்படிப்பு வரை படித்துள்ளேன். சம்பவ சமயத்தில் நாதேகவுடண்பாளையத்திலிருந்து பல்லடம் நோக்கி வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்தேன். போலீசார் விசாரணையில் அவ்வாறு சொன்னேன் என்றால் சரிதான். எதற்காக பல்லடம் நோக்கி சென்றேன் என்றால் தினமும் தேங்காய் லோடு எடுக்க செல்வேன். எத்தனை மணிக்கு கிளம்பி சென்றேன் என்றால் 8.30 மணி இருக்கும். 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்தேன். முதல் ஆம்புலன்ஸ் வந்தபோது வெள்ளியங்கிரிக்கு உயிர் இருந்ததால் அந்த ஆம்புலன்ஸில் வெள்ளியங்கிரியை எடுத்துச்சென்றார்கள். இரண்டாவது ஆம்புலன்ஸில் நாகராஜை எடுத்துச்சென்றார்கள். பல்லடம் அரசு மருத்துவமனையில் நாகராஜை அனுமதித்தபோது அவருடன் வந்த நபரின் பெயர்

விபரங்களாக எனது பெயர் விபரங்களை சொன்னேன் என்றால் சரிதான். உண்மையில் நான் சொல்லும்விபரம் தவறு என்றாலும், உண்மையில் மருத்துவமனையில் சேர்ந்து இருந்தால் எனது பெயர் இறப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கும் என்றாலும் சரியல்ல. உண்மையில் அவ்வாறு இறப்பு அறிக்கையில் குறிப்புகள் இல்லை என்றால் எனக்கு தெரியாது.

5) நாகராஜ்க்கு இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. உள்ளது. சம்பவ சமயத்தில் அவர் கையில் வைத்திருந்தாரா என்றால் இல்லை. நான் எந்த வாகனத்தில் சென்றேன் என்றால் TN 42 AH165 என்ற Honda Dream Uga என்னுடைய வாகனத்தில் சென்றேன். நாகராஜ் எந்த வாகனத்தில் வந்தார் என்றால் சம்பவத்திற்கு சிறிது காலத்திற்கு முன்பாக வேறு ஒருவரின் வாகனத்தை எடுத்துக்கொடுத்தேன். பெயர் மாற்றம் செய்யவில்லை. அது யாருடைய வண்டி என்று தெரியாது. வெங்கடேஷ்வரா பைனான்ஸில் வண்டியை எடுத்துக்கொடுத்தேன். புகாரில் நாகராஜ் மனைவியிடம் போன் இல்லை என்பதால் பக்கத்து வீட்டில் உள்ள நபர்களுக்கு போன் செய்து சொன்னேன் என்ற விபரத்தை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் சென்று பார்த்தபோது அருகில் உள்ள நபர்கள் வந்து கூட்டம் கூடி விட்டார்கள் என்றால் நான் பார்த்தபோது தான் விபத்து நடந்தது. நான் போய் வண்டியை தூக்கி நிறுத்தியபோது கூட்டம் கூடியது. அப்போது அருகாமையில் உள்ள கடைகளில் இருந்த நபர்கள் விபத்தை நேரில் பார்த்தார்கள் என்றால் சரிதான்.

6) பல்லடம்-தாராபுரம் ரோடானது போக்குவரத்து மிகுந்த ரோடு என்றால் சரிதான். சம்பவத்தின் போது எனக்கு முன்பாகவும், எதிர் திசையிலும் வாகனங்கள் வந்து கொண்டும், சென்று கொண்டும் இருந்தது என்றால் சரிதான். எனக்கு முன்பாக TATA ACE வாகனம் வந்தது. நாகராஜ், வெள்ளியங்கிரி எத்தனை வருடம் வேலை செய்தார்கள் என்றால் 1 ½ வருடம் இருக்கும். வழக்கு விபத்திற்கு நாகராஜ் தான் காரணம் என்றாலும், அவர் பேருந்தை முந்திக்கொண்டு வந்து வலது புறமாக ஏறி வந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. இரண்டும் நேருக்கு நேர் மோதியது. சம்பவ சமயத்தில் நான் சம்பவ இடத்திற்கு நான் செல்லவில்லை என்பதால், எங்களிடம் வேலை பார்த்த நபர்கள் என்பதால் சம்பவ இடத்திற்கு சென்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், போலீசார் விசாரணையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்லும்போது சம்பவத்தை பார்த்தாகவும்,

முதல் விசாரணையில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்றபோது சம்பபவத்தை பார்த்தாகவும் சொல்லியுள்ளேன் என்றாலும், இறந்துபோன நபர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA Digitally signed by K CHITHRA Date: 2025.01.27 20:26:56 +0530

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 109 of 2017

வழக்கு சாட்சி - PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.ராதா | ஜாதி | : | |
| கணவர் பெயர் | : | நாகராஜ் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | மனக்கடவு கிராமம் | சமயம் | : | |
| தாலுக்கா | : | தாராபுரம் | வயது | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 27.01.2025.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :** **நாள் : 27.01.2025**

1) நான் தற்போது மேலே கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். சம்பவ காலத்தில் நாதேகவுடன்பாளையத்தில் கிருஷ்ணசாமி என்பவருக்கு சொந்தமான தோட்டத்தில் வேலை பார்த்து வந்தேன். எனது கணவரும் என்னுடன் வேலை பார்த்து வந்தார். எனக்கு இரண்டு குழந்தைகள். விபத்தில் இறந்துபோன நாகராஜ் எனது கணவர் ஆவார். அவருடன் வேலை செய்த மற்றொரு வரும் விபத்தில் இருந்தவர் ஆவார். கடந்த 06.02.2017 ஆம் தேதி காலை சுமார் 7.00 மணிக்கு எனது கணவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் கடைக்கு சென்றுவிட்டு வருவதாக சொல்லிவிட்டு சென்றவர், ஒரு மணி நேரம் கழித்து எங்கள் தேங்காள் களத்தில் வேலை செய்யும் மேனேஜர் எனக்கு போன் செய்து எனது கணவரும், வெள்ளியங்கிரி என்பவரும் இருசக்கர வாகனத்தில் சென்றதாகவும், கள்ளக்கிணறு திவ்யா பெட்ரோல் பங்க் அருகில் சென்றபோது TATA ACE வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அதில் எனது கணவருக்கு தலையில் அடிப்பட்டு இரத்தம் வந்து சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும், மற்றொருவரை ஆம்புலனஸ் மூலம் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் சொன்னார்.

2) எனது கணவரையும் பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக தகவல் சொன்னார். நான் தகவல் கேள்விப்பட்டு பல்லடம் அரசு மருத்துவமனைக்கு வந்து

பார்த்தபோது தலையில் அடிபட்டு இருந்தது. நான் பார்க்கும்போது இறந்து இருந்தார். நான் பல்லடம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகாரை நான் சொல்ல சொல்ல மேனேஜர் எழுதினார். நான் அதில் கையொப்பம் செய்தேன். TATA ACE வாகனத்தை ஓட்டி வந்த நபர் குணசேகரன் என்று சொன்னார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த **புகார் அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் எனது கணவர் பிரேத்தின் மீது பிரேத விசாரணை செய்தார்கள். நான் உடனிருந்தேன். இது சம்மந்தமாக போலீசார் வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

3) எனது கணவருக்கு இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. உள்ளது. உண்மையில் ஓட்டுநர் உரிமம் இருந்தது இருந்தால் போலீசார் விசாரணையில் கொடுத்து இருப்பேன் என்றால் நான் கொடுத்தேன். விபத்தை நேரில் பார்க்காததால் வழக்கு விபத்து எவ்வாறு நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். தகவல் கேள்விப்பட்டு 10 மணிக்கு மருத்துவமனைக்கு வந்து இருப்பேன். அவரது இறப்பிற்கு நஷ்ட ஈடு கேட்டு மனுதாக்கல் செய்ய வழக்கறிஞர் வந்து இருந்தாரா என்றால் வந்து இருந்தார். அந்த வழக்கறிஞர் புகார் கொடுப்பதற்கும், மருத்துவமனையில் மற்ற நடைமுறைக்கும் உதவி செய்தார் என்றால் சரிதான். வழக்கு விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனத்தின் பதிவு எண்ணை புகாரில் எழுதி என்னிடம் கையொப்பம் மட்டும் அந்த வழக்கறிஞர் பெற்றார் என்றால் சரிதான். நஷ்ட ஈடு கோரி மனுதாக்கல் செய்து நஷ்டஈடு பெற்றுவிட்டேன் என்றால் சரிதான்.

4) சம்பவத்தன்று எனது கணவர் கடைக்கு கிளம்பியதாக சொல்லியிருப்பதில் சம்பவ இடத்திற்கு முன்பே நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டதாக தகவல் கேள்விப்பட்டு நானும், எனது அக்காவும் மருத்துவமனைக்கு சென்றோம். அதற்கு முன்பாகவே எனது ஓனர் சம்பவ இடத்திற்கு சென்று அங்கு இருந்தார். எத்தனை நபர்கள் தேங்காய் களத்தில் வேலை செய்தனர் என்றால் 4 குடும்பங்கள் ஆகும். என்னுடைய போன் நம்பர்ஓனருக்கும், மேனேஜருக்கும் தெரியாது. எனது கணவரின் போன் நம்பர் மட்டுமே அவருக்கு தெரியும். வழக்கு விபத்திற்கு எனது கணவர் தான் காரணம் என்றாலும், பேருந்தை ஓவர் டேக் செய்து பஸ்ஸை முந்திக்கொண்டு வலது புறமாக ஏறி வந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2025.01.27 20:27:05 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.